Registered as a Newspaper


# உதயன்

விலை ரூபா -00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 09 திங்கட்கிழமை (23-06-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 204


# யுத்தத்தை நிறுத்தக்கோரி கூட்டணி நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கும்

## மத்திய குழுக் கூட்டத்தில் முடிவு

கொழும்பு, ஜூன் 23

★ அரசும் - விடுதலைப் புலிகளும் உடன் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும்,

★ மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

★ தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய அரசியல் தீர்வுத்திட்டம் கொண்டு வரப்பட வேண்டும்.

மேற்கண்ட மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்து எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பிக்கும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரை தமிழர் விடுதலைக் கூட்டணி பகிஷ்கரிக்கும்.

வெள்ளிக்கிழமை இரவு கொழும்பில் கூட்டணியின் தலைவர் எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற கூட்டணியின் மத்திய குழு மேற்கண்ட முடிவை எடுத்தது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையில் தொடர்ந்து அங்கம் வகிப்பதா? இல்லையா?

### முஸ்லிம் காங்கிரஸ் முடிவு செய்யும் என்கிறார் அஷ்ரப்

மட்டக்களப்பு, ஜூன் 23

"ஓரிரு தினங்களில் ஜனாதிபதியை மீண்டும் சந்தித்துப் பேச்சு நடத்தவிருக்கிறேன். ஜனாதிபதியுடனான பேச்சில் திருப்தியான பதில் கிடைக்காது விட்டால் அமைச்சரவையில் தொடர்ந்து அங்கம் வகிப்பதா? அல்லது இல்லையா? என்று பரிசீலனை செய்ய வேண்டிய நிலை முஸ்லிம் காங்கிரஸுக்கு ஏற்படும்."

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அம்பாறையில் தங்கியுள்ள அவர் உள்ளூர்ச் செய்தியாளர்களுடன் நேற்றுப் பேசும்போது இதனைத் தெரிவித்தார்.

வடபகுதி புனர்வாழ்வு, புனரமைப்பு பொறுப்பையும் நான் கேட்பதாகச் சிலர் கூறுகின்றனர். ஆனால் அதில் உண்மை எதுவும் இல்லை.

நான் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராக இருந்தபோது, வடக்கு புனரமைப்புப் பணி ஜனாதிபதியின் பொறுப்பின் கீழ்த்தான் இருந்தது.

ஏற்கனவே எனக்கு வழங்கப்பட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சை மீண்டும் எனக்கு வழங்கவேண்டும் என்றே நாம் வலியுறுத்தி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### ஷெல் வீச்சு

நெடுங்கேணியில் இருந்து புளியங்குளம் நோக்கி நேற்றுக்காலை 6 மணி முதல் கடும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. சேத விவரம் தெரியவில்லை.

(இ-3-164)

### கப்பல் சேவை

காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று இரு கப்பல்களில் 650 பயணிகள் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இக்கப்பலில் செல்ல பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 567 முதல் 591 வரை உள்ளோரில் பயணத்தை உறுதி செய்தவர்களை இன்று யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-3)

### திருமலையில் 4 முஸ்லிம்கள் கைது

வவுனியா, ஜூன் 23

திருகோணமலையில் நேற்று தேடுதல் நடத்திய படையினர் 4 முஸ்லிம்கள் உட்பட 6 பேரைக் கைது செய்தனர்.

கைதான முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளுக்கு உதவி வழங்குபவர்கள் என்று படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ 3-5-164)

### துப்பாக்கிச் சூடு: வேம்பிராயில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 23

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானதாக, ஒருவரின் சடலம் சாவகச்சேரிப் பொலீஸாரால் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

மீசாலை வடக்கு, வேம்பிராய்ப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இச்

( 8 ஆம் பக்கம் பார்க்க)

# வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை விநியோக மையம் இடம்மாற்றம்

## வவுனியாவில் இருந்தே இனி எடுத்துச் செல்லப்படும்

வவுனியா, ஜூன் 23

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைத் துருப்புக்களுக்கான விநியோக மையம் வவுனியா தளத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை விநியோக மையமாக இருந்த தாண்டிக்குளம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்தே இந்த மாற்றம் என்று தெரிவிக்கப்பட்டது.

'வெற்றி உறுதி' துருப்பினருக்குத் தேவையான டாங்கிகள், ஆயுதங்கள் யாவும் இனி வவுனியா தளத்தில் இருந்தே அனுப்பப்படும்.

அதேசமயம் தற்போது இடைநிறுத்தப் பட்டுள்ள 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை எந்நேரத்திலும் ஆரம்பிக்கப்படலாம் என்று ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையின் பாதுகாப்புச் செய்தியாளர் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி தகவல் வெளியிட்டுள்ளார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தொப்பிக்கல காட்டுக்குள் புலிகள் பெருமளவில் ஊடுருவல்

கொழும்பு, ஜூன் 23

கிழக்கில் எல்லைக் கிராமங்களில் தாக்குதல் நடத்தும் நோக்கத்துடன் 500 விடுதலைப்புலிகள் தொப்பிக்கல காட்டுக்குள் ஊடுருவியிருக்கின்றனர் எனத் தகவல் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மன்னாரில் இருந்து வெலிகந்த ஊடாக இவர்கள் கடந்த இருவாரங்களாக தொப்பிக்கல காட்டுக்குள் ஊடுருவியுள்ளார்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



...வைக்குத்தான் வெற்றி போல......?

## குர்டிஷ் போராளிகளிடமிருந்து ஏவுகணை வாங்க புலிகள் முயற்சி

கொழும்பு, ஜூன் 23

''விடுதலைப் புலிகள் ஈராக்கில் உள்ள 'குர்டிஷ்' போராளிகளிடம் இருந்து ஏவுகணைகளைப் பெற பேச்சு நடத்தி வருகிறார்கள்''.

இப்படி சர்வதேச பொலீஸ் அமைப்பான 'இன்டர் போல்' இலங்கை அரசுக்கு தகவல் வழங்கியுள்ளதாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதிக்கு எதிராக

## குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டுவர கூரே முயன்றாரா?

கொழும்பு, ஜூன் 23

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குற்றவிசாரணைப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர முயற்சித்தார் என்ற காரணத்துக்காகவே முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே கைது செய்யப்பட்டார். என்று கொழும்பில் இருந்து வெளிவரும் 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார ஏடு தகவல் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு எதிராக குற்றவிசாரணைப் பிரேரணை கொண்டுவருவது தொடர்பாக சிறிசேன கூரே ஐ. தே. க. எம். பிக்களுடன் பேச்சுக்கள் நடந்தி வந்தார்; ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஈ. பி. டி. பியில் இருந்து நீக்கப்பட்ட இரு எம்பிகள் ஆகியோருடனும் இது பற்றி அவர் பேசியுள்ளார்.

அத்துடன் இந்த விடயம் அமைச்சர் அஷ்ரப்புக்கும் ஒருவர் மூலம் சிறிசேன கூரேயினால் தெரிவிக்கப்பட்டது.

இப்படி அப்பத்திரிகையே லும் தெரிவித்துள்ளது.

(இ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா நாகராசா

வேம்பிராய் மீசாலை வடக்கைச் சேர்ந்த கந்தையா நாகராசா 22 - 06 - 97 அன்று அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ் சென்ற கந்தையா - மீனாட்சி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், சோமசுந்தரம் (ப.நோ.கூ சங்கம், சாவகச்சேரி கிளை பரிசோதகர்), வேலுப்பிள்ளை (கனடா — முன்னாள் இ. போ ச. DIG), கனகசபை (உத்தரவு பெற்ற நில அளவையாளர், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி பகுதி நேர விரிவுரையாளர்), கந்தசாமி (இத்தாலி — முன்னாள் இ. போ: ச. உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 23-6-97 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றுத் தகனக்கிரியைகளுக்காகப் பூதவுடல் வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கேமலதா கந்தசாமி (மைத்துனி)
(சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியை)

மீசாலை வடக்கு,
மீசாலை.

(47956)

## வீரகத்தி நாகராசா

யாழ்ப்பாணம், 39/3, இராசாவின் தோட்டத்தை சேர்ந்த வீரகத்தி நாகராசா 22-06-97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வீரகத்தி வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகனும், தனபாக்கியத்தின் அன்புக் கணவரும், சரஸ்வதி (ஆஸ்திரேலியா), சந்திரமதி (ஜேர்மனி), சந்திரசேகர் (இந்தியா) ஆகியோரின் அன்புத்தந்தையும், சண்முகராசா (ஆஸ்திரேலியா), கோபாலபிள்ளை (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீபன், கரிதரன், கார்த்தி, அனு. சிந்து (ஆஸ்திரேலியா), சங்கர், சம்மி, ஜம்மி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப்பேரனாருமாவார். இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (23-6-97) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
த. துரைச்சாமி
(மைத்துனர்)

(47958)

## சுப்பிரமணியம் அருணாசலம்
### (I. C. R. C.)

காரைநகரை பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அருணாசலம் 21-06-1997 அன்று அகாலமரணமானார்.

அன்னார் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்லாச்சியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, பராசக்தி ஆகியோரின் மருமகனும், பிரபாகரன் (யா/மத்திய கல்லூரி), பிரகாஷ் (யா/மத்திய கல்லூரி), பிரதாபன் (யா/மத்திய கல்லூரி), பிரதீபா (O.L.R), பிரசாந்தி (O.L.R), பிரசாந் ஆகியோரின் அன்புத்தந்தையும், நாகேஸ்வரி, ஜெயலட்சுமி, இராசமலர், உத்தமதேவி, ராதா (தாவடி), மோகனதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வைத்தீஸ்வரன் (பிரான்ஸ்), பேரின்பம், கனகலிங்கம், மகேஸ்வரி (மன்னார்), யோகேஸ்வரி (வவுனியா), சுந்தரலிங்கம் (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 23-06-97 முற்பகல் 12-00 (புதிய நேரம்) மணிக்கு குகன் வீதி, அரியாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துபாத்தி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. பிரபாகரன்
(மகன்)

குகன் வீதி,
அரியாலை.

(47955)

## அகிலாண்டேஸ்வரி அப்பாத்துரை
### (ஓய்வு பெற்ற K.V.S. திருநெல்வேலி விவசாய பாடசாலை)

செல்வி அகிலாண்டேஸ்வரி அப்பாத்துரை 22-06-97 அன்று காலமானார். அன்னார் அப்பாத்துரை கமலாம்பிகை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற வேதநாயகம் மற்றும் ராஜபூபதி முத்துக்கிருஷ்ணன், புவனேஸ்வரி கங்காபதி, சீதாலக்ஷ்மி கோகுலதாஸ் ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார்.

அவரது இறுதிக்கிரியைகள் இன்று 23-06-97 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல: 10, செம்மணிவீதி, நல்லூரில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. கோகுலதாஸ்
(மைத்துனர்)

இல: 10, செம்மணி வீதி,
நல்லூர்.

(47952)

# ஐ. நா. நிவாரண அமைப்புக்களை சேர்ந்த மூவர் இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஜூன் 23

ஐ. நாவைச் சேர்ந்த மூன்று அமைப்புக்களின்பிரதிநிதிகள் மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக இலங்கை வதிவிடப் பிரதிநிதி பீற்றர் மேஜர்—

ஐ. நா. அபிவிருத்தி திட்டத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி அரு ஒவ்ஸ்ராண்ட்—

உலக உணவு திட்டத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஜோசப் ஸ்காலைஸ்—ஆகியோரே இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

வலி—வடக்குப் பகுதியில் மீளக்குடியமர விருக்கும் மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் வகையில் யாழ். அரச அதிபரால் தயாரிக்கப் பட்டுள்ள திட்டத்துக்கு இந்த அமைப்புக்கள் உதவ முன்வந்துள்ளன.

இந்த அமைப்புக்களின் மூன்று பிரதிநிதிகளும் நாளை அப்பகுதிக்கு சென்று தேவைகள் குறித்து நேரடியாக ஆராய்வர்.

யாழ். செயலகத்தில் திணைக்கள தலைவர்களை இன்று சந்தித்து கலந்துரையாடும் இக்குழுவினர் குருநகர் இறங்குதுறை அபிவிருத்தி தொடர்பாக நேரில் ஆராய்வார்கள்.

இறங்குதுறையையும், இடைத்தங்கல் முகாம் ஒன்றையும் குருநகரில் புனரமைப்பது தொடர்பாக அவர்கள் ஆராய்வார்கள்.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் காலத்தில் சர்வதேச, உள்நாட்டு அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் இவர்கள் சந்திப்பர். (இ-3)

# ஊர்காவற்றுறை அந்தோனியார் ஆலயத் திருவிழா நேற்று

யாழ்ப்பாணம், ஜூன் 23

கடந்த 7 வருடங்களின் பின்னர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயத்தில் நேற்றுதிருவிழா கூட்டுத்திருப்பலி மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வந்த ஏராளமான மக்கள் முன் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

அதனைத் தொடர்ந்து திருச்சொருப ஆசீர் இடம் பெற்றது.

கடந்த 7 வருடங்களாகக் கைவிடப்பட்ட நிலையில் இருந்த இத்தேவாலயத்தை கொழும்பிலுள்ள பல நிறுவனங்களின் உதவியுடன் 514 ஆவது படையணித் தளபதி கேணல் பி. பி. எஸ். மென்டிஸ் புனர் நிர்மாணம் செய்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று திருப்பலியையடுத்து நடந்த கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

# சமய சந்நிதிகளில்

நெடுந்தீவு மத்தி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய திருநாள் திருப்பலிப் பூசையும் திருச்சுற்றுப் பிரகாரமும் நாளைமறுதினம் புதன் கிழமை காலை நடைபெறும். திருநாள் திருப்பலியை பங்குத்தந்தை அருட்திரு மொன்வெட் அடிகளார் ஒப்புக்கொடுப்பார். (ஐ-103)

★ ★ ★

நல்லூர் ஆடியபாதம் வீதி அருள் மிகு ஸ்ரீராஜ ராஜேஸ்வரி (பேர்த்தி) அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர் வரும் 21 ஆம் திகதி காலை 108 கலச சங்காபிஷேகமும், அதனை அடுத்து விசேட பூசையுடன் அம்பாள் உள் வீதி வலம் வருதலும் இடம்பெறும். (ஐ 30)

★ ★ ★

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம் பதி ஸ்ரீ பத்திரகாளி கோயில் வருடாந்த மணிக்கோபுர சங்காபிஷேகம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு நடைபெறும். சங்காபிஷேகத்தை தொடர்ந்து மகேஸ்வரபூசை இடம் பெறும். (ஐ-15)

★ ★ ★

வண்ணார்பண்ணை மேற்கு காட்டுத்துறை அருள் மிகு அம்பலவாணவிக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில் மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (ஐ)

★ ★ ★

சண்டிலிப்பாய் வேவிற்பதி ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் புதன் கிழமை பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. அடுத்த மாதம் 2 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 3 ஆம் திகதி இரதோற்சவமும், 4 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன. (ஐ-135)

★ ★ ★

மந்திகை அருள் மிகு ஸ்ரீ கண்ணகை அம்பாள் தேவஸ்தான [illegible] இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளன. (ஐ-15)

# விமான நிலையத்தில் தமிழர் மீதான துன்புறுத்தல் நிறுத்த வேண்டும்
## கூட்டணி எம். பி. கோரிக்கை

கொழும்பு, ஜூன் 23

''வெளிநாடு செல்லும் தமிழர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் எதிர் நோக்கும் துன்புறுத்தல்களை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்'' இப்படி மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

கடந்த 19ஆம் திகதி வெளிநாடு செல்வதற்காகச் சென்ற 21 தமிழ் இளைஞர்களும் ஒரு தமிழ் யுவதியும் கட்டுநாயக்கவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் இணைந்து சென்ற பெரும்பான்மை இனத்தவர் மட்டும் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தேவையான சகல ஆவணங்களும் இருந்தாலும் கூட தமிழ்ப் பயணிகள் கட்டுநாயக்கவில் துன்புறுத்தல்களுக்குள்ளாகின்றார்கள். இதை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படி அவர் கேட்டுள்ளார். (இ-3-150)

# காரைநகர் பாடசாலைக்கு ஈ.பி.டி.பி. அமைப்பு உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். மாவட்ட ஈ. பி. டி. பி. கட்சி எம்.பிக்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து வாங்கப்பட்ட தொலைக்காட்சி மற்றும் விளையாட்டு உபகரணங்கள் காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலைக்கு வழங்கப்படுகின்றன.

இது தொடர்பான வைபவம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு காரைநகர் பிரசைகள் குழுத் தலைவர் ஆர். சிதம்பரம் தலைமையில் பிரஸ்தாப வித்தியாசாலையில் நடைபெறும்.

ஈ. பி. டி. பியின் தீவுப் பகுதி அரசியல் அமைப்பாளர் என். மனோகரன், தீவுப் பகுதி உதவி அரசியல் அமைப்பாளர் என். ஜோகன், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், காரைநகர் சமாதான நீதிவான் பி. நாகரத்தினம் மற்றும் கடற்படை அதிகாரி ஆகியோர் இன்றைய வைபவத்தில் கலந்து கொள்கின்றனர். (இ)

# தீயசக்திகளுக்கு எதிராக படையினர்உஷார்நிலை

அரசியல் காரணங்களுக்காக தீயசக்திகள் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முனைவதாகக் கிடைத்த தகவலை அடுத்து கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் வீதிச்சோதனைகளும், சுற்றிவளைப்புகளும் மேற்கொள்ளப்படும் என்றும்—

இராணுவமும், பொலீஸாரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும்— மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-150)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியரான

## சுப்பிரமணியம் அருணாசலம்

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருடன் நாமும் கலந்து கொள்வதுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சக ஊழியர்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்
(I. C. R. C.) (47957)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் அரசதலைவர்களுடன் இந்திய வெளியுறவுசெயலர் சந்திப்பு

இஸ்லாமாபாத், ஜூன் 23
பாகிஸ்தானுக்குச் சென்றுள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர் சல்மான்ஹைதர் பாகிஸ்தான் ஜனாதிபதி லெஹாரியையும், பிரதமர் நவாஸ் ஷெரீப்பையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை சுமுகமான நிலைக்கு கொண்டுவருவதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பேச்சுவார்த்தைகளின் இரண்டாவது கட்டமாக இந்திய வெளியுறவுச் செயலர் அங்கு சென்றுள்ளார்.

தற்போதைய பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி லெவராரி இந்தியப் பிரதிநிதியிடம் தெரிவித்தார்.

ஆக்கபூர்வமான சமாதான நோக்கத்துடனேயே இந்தியா பேச்சுக்களில் கலந்து கொள்வதாக சல்மான் ஹைதர் அவருக்கு உறுதியாக எடுத்துக் கூறினார்.

இதேவேளை—

காஷ்மீர்மாநிலத்தில் பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள பகுதியை மீண்டும் திருப்பி ஒப்படைத்துவிட வேண்டும் என்று முதலமைச்சர் பாரூக் அப்துல்லா பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

## அமெரிக்காவுடனான தொடர்பு குறித்து

# டென்மார்க் - கிறீன்லாந்து இடையே அரசியல் பிணக்கு?

ரொஜ்ஜாவிக் ஜூன் 23
அமெரிக்காவில் அகற்றப்படும் செயல் இழந்த அணு ஆயுதங்களை கிறீன்லாந்தில் உள்ள பனி மலைகளின் அடியில் சேமிப்பது தொடர்பாக அமெரிக்காவுடன் பேச்சு நடத்தத் தயார் என்று கிறீன்லாந்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த அணு ஆயுதங்களை எவ்வாறு பாதுகாப்பாக வைப்பது என்ற பேச்சுவார்த்தைகளை கிறீன்லாந்தும், அமெரிக்காவும் நேரடியாகவே நடத்த வேண்டும் என கிறீன்லாந்தின் பிரதமர் லாஸ் எமல் ஜொஹன்ஸன் தெரிவித்துள்ளார்.

கிறீன்லாந்தின் பாதுகாப்பு மற்றும் வெளிவிவகாரத் துறைகளுக்கு டென்மார்க் அரசாங்கமே பொறுப்பாக உள்ளது.

இந்நிலையில் கிறீன்லாந்து பிரதமர் தன்னிச்சையாக அமெரிக்காவுடன் பேச்சு நடத்த முடிவெடுத்திருப்பது டென்மார்க் அரசுக்கு அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கிறீன்லாந்தின் இந்த நடவடிக்கை டென்மார்க்கின் அரசமைப்பு பிரச்சினைகளை உருவாக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுமார் 55ஆயிரம் மக்களைக் கொண்ட கிறீன்லாந்து டென்மார்க்கின் கீழ் உள்ள சுதந்திரமான தனிப்பட்ட பிரதேசமாகும்.

# பொல்பொட்டை நாட்டுக்கு வெளியே விசாரணைக்குட்படுத்த வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை கேட்கிறது

லண்டன், ஜூன் 23
'கெமரூச்' இயக்கத்தின் பலம் வாய்ந்த தலைவரான பொல்பொட் கைது செய்யப்பட்டால் கம்போடியாவுக்கு வெளியே சர்வதேச சட்டத்தின் கீழேயே அவர் விசாரிக்கப்பட வேண்டும்.

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் சர்வதேச மன்னிப்புச் சபை இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

'கெமரூச்' தலைவர் பொல்பொட் கைது செய்யப்பட்டிருப்பதாக கம்போடியாவின் இணைப் பிரதமர்கள் இருவரும் கூட்டாக அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்த அறிக்கை சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளது.

கம்போடியாவில் தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பு முறையும், நீதிச் சேவையில் காணப்படும் சிக்கல்களும் 'கெமரூச்' தலைவர்களுக்கு அங்கு நீதியான விசாரணை நடத்துவதை சிரமமாக்கியுள்ளன என்று மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டி உள்ளது. அத்துடன் சிரேஷ்ட 'கெமரூச்' உறுப்பினர்களுக்கு எதிராகச் சுமத்தப்படக்கூடிய குற்றச்சாட்டுக்கள் ஜெனீவா சாசனத்தை மீறியவை; மனித நேயத்துக்கு எதிரானவை. எனவே சர்வதேச நீதி பரிபாலனத்துக்குள்ளேயே இக்குற்றச் சாட்டுகள் அடங்கும் என்றும்மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

கம்போடிய மண்ணில் நிகழ்ந்த சுமார் 10 லட்சம் மக்களின் கொலைகளுக்கு பொல்பொட் அவர்களே பொறுப்புஎனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது தெரிந்ததே. (ஐ)

# பிரிட்டனில் எதிர்க்கட்சிக்கு புதிய தலைவர்

லண்டன், ஜூன் 23
பிரிட்டனின் எதிர்க்கட்சியான கொன்ஸர்வேட்டிவ் கட்சியின் புதிய தலைவராக வில்லியம் ஹேக் (வயது 36) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கொன்ஸர்வேட்டிவ் கட்சியின் கடந்த 200 வருடகால வரலாற்றில் பணியாற்றிய தலைவர்களில் இவரே வயதில் இளையவராவார்.

கட்சியை மீண்டும் கட்டியெழுப்பி அதிகாரத்துக்குக் கொண்டுவரப் பாடுபடப் போவதாக வில்லியம் ஹேக் உறுதியளித்துள்ளார்.

அண்மையில் நடந்த பொதுத் தேர்தலில் தொழிற் கட்சியிடம் கொன்ஸர்வேட்டிவ்கட்சி படுதோல்வி கண்டது. (ஐ)

# அமெரிக்கா எதிர்ப்பு

வாங்ஷிடன், ஜூன் 23
கம்போடியாவின் தேசிய அரசியலில் 'கெமரூச்' கெரில்லாக்களுக்கு இடமளிக்கப் படக் கூடாது என்று அமெரிக்காதெரிவித்துள்ளது.

கெமரூச்' தலைவர் பொல்பொட் சரணடைந்தது தொடர்பாக கம்போடியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைவரம் குறித்து அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பெனாசிர் கருத்து

இஸ்லாமாபாத், ஜூன் 23
எந்த ஒரு பாகிஸ்தான் பிரதமரும் அமெரிக்காவின் ஆதரவும், இராணுவத்தின் ஒத்துழைப்பும் இன்றி அப்பதவியில்தொடர்ந்து நீடிக்க முடியாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ.

இஸ்லாமாபாத்தில் கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இப்படித் தெரிவித்தார். (ஐ)

# மியான்மரில் நால்வர் கைது

ரங்கூன், ஜூன் 23
மியான்மரில் ஜனநாயகத்தைக் கோரும் எதிர்க்கட்சித் தலைவியான ஆங் சாங் சுகியின் உரைகள் அடங்கிய வீடியோ ''கஸெற்று''க்கள் மற்றும் ஆவணங்களை நாட்டைவிட்டு வெளியே கொடு செல்வதில் உதவியதாகக் கூறப்படும் அவரது நெருங்கிய சகாக்கள் நான்கு பேரை அந்நாட்டின் இராணுவ அரசு கைது செய்துள்ளது.

தலைநகர் ரங்கூனில் அவர்கள் விசாரணை செய்யப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. (ஐ-5)

# வெளிநாட்டுப் பயண முகவர் இந்தியப் பொலீஸாரால் கைது

ஐரோப்பிய நாடுகளுக்கு சட்டவிரோதமாக ஆள்களை அனுப்பி வைப்பதில் ஈடுபட்டுவந்ததாகக் கூறப்படும் முகவர் ஒருவரை ஜலந்தரில் இந்தியப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

விஜயகுமார் பண்டிற் என்ற இந்தச் நபர் கடந்த 17 வருடங்களாக இந்த சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் மோல்ராவுக்கு அருகே அட்ரியாட்டியிக் கடலில் மர்மமான முறையில் ஆள்களை ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்று கடலில் மூழ்கிய சம்பவத்துடன் இவருக்குத் தொடர்பு இருப்பதாகச் சந்தேகிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# பீஹார் முதல்வர் லாலு பதவி விலகுவார்

புதுடில்லி, ஜூன் 23
இன்னும் ஓரிரு தினங்களில் முதல்வர் லாலு பிரசாத் யாதவ் பதவி விலகிவிடுவார் என்று ஜனதாதள் கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கால்நடைத் தீவன ஊழலில் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படும் பீஹார் முதலமைச்சர் பதவி விலக வேண்டும் என ஜனதாதள் கட்சியின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

உத்தியோகபூர்வமற்ற முறையில் நேற்று முன்தினம் புதுடில்லியில் கூடிய ஜனதாதள் கட்சித் தலைவர்கள் பீஹார் மாநில ஊழல் விவகாரம் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

இதேவேளை—

ஜனதாதள் தலைவர் பதவி தொடர்பாக இக்கூட்டத்தில் பொது உடன்பாடு எதுவும் எட்டப்படாததால் தலைவர் பதவிக்குத் தேர்தல் நடத்த வேண்டிய நிலைமையையே இன்னும் நீடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# முதல்வர் லாலுவின் வீடுகள் அதிகாரிகளால் சல்லடை

புதுடில்லி ஜூன்23
பீஹார் மாநில முதலமைச்சர் லாலுபிரசாத் யாதவ்வின் வீட்டிலும் அவரது குடும்ப உறவினர்களின் வீடுகளிலும் சீ.பி ஐ அதிகாரிகள் திடீர்ச் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நான்கு வீடுகளில் ஆரம்பித்த தேடுதல் நடவடிக்கை இரவு வரை நீடித்தது. ஆனால் அங்கிருந்து பொருள்கள் ஏதும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படவில்லை.

பலகோடி ரூபா பெறுமதியான கால்நடைத் தீவன கொள்வனவு மோசடி தொடர்பாகக் குற்றஞ் சாட்டப்பட்ட முதலமைச்சர் யாதவ் மீது வழக்குத் தொடருவதற்கான அனுமதியை மாநில ஆளுநர் சீ.பி. ஐக்கு அறிவித்துள்ளதை அடுத்து இந்த தேடுதல் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. (ஐ)

# அகதிகள் மீதான தாக்குதல் அதிகரிப்பு

## ஐ. நா. சபை கவலை

உலக அரங்கில்

நியூயோர்க், ஜூன்23
யுத்தம் நடைபெறும் பகுதிகளில் அகதிகள் மீதும், குடிமக்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படுவது அண்மைக் காலமாக அதிகரித்து வருவது குறித்தும் - நிவாரணப் பணியாளர்கள் தாக்குதலுக்கு இலக்காவது குறித்தும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

சர்வதேச மனித நேயச் சட்டத்தை மீறுவோரை நீதிக்கு முன் நிறுத்துவது தொடர்பாக பாதுகாப்புச் சபையில் நீண்ட நேரம் இடம் பெற்ற விவாதத்தின் முடிவில் விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு கவலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# பொல்பொட் கடும் சுகயீனம்

நொம்பென், ஜூன் 23
கைது செய்யப்பட்டிருக்கும் 'கெமரூச்' தீவிரவாத இயக்கத் தலைவர் பொல்பொட் கடும் சுகயீனமுற்றிருப்பதாக கம்போடிய அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவருக்குத் தொடர்ந்து 'ஒட்சிசன்' வழங்கி சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொல்பொட்டை தலைநகர் நொம்பெனுக்கு கொண்டு வர ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# காஷ்மீர் மக்களின் உரிமைக்கு பாகிஸ்தான் பூரண ஆதரவு தரும்

## வெளியுறவுச் செயலர் தெரிவிப்பு

இஸ்லாமாபாத், ஜூன் 23
இந்தியாவுடன் சமாதானப் பேச்சுகளை நடத்தி வரும் அதேவேளை காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு இதயபூர்வமான, அரசியல் ரீதியான ஆதரவை பாகிஸ்தான் தொடர்ந்து வழங்கும்.

பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் சம்சாத் அகமட் தம்மைச் சந்தித்த காஷ்மீர் தலைவர்களின் தூதுக்குழுவினரிடம் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத்துக்கு விஜயம் செய்துள்ள மேற்படி தூதுக் குழுவினர் காஷ்மீரில் இந்திய ஆட்சியை எதிர்க்கும் அரசியல் மற்றும் தீவிரவாத இயக்கங்களின் தலைவர்களை ஒரே குடையின் கீழ் கொண்டுவரத்தக்கதாக சகல கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும் மாநாடு ஒன்றை நடத்தும் யோசனையை முன்வைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# ஐ. நா. குழு மீது ஈராக் கண்டனம்

தெஹிரான் ஜூன் 23
ஐ. நாவின்ஆயுத பரிசோதனைக் குழுவினர் பக்தாத் நகரின் சுற்றுப் புறங்களில் உள்ள தேவாலயங்களிலும் கன்னியர், குருமார் தங்கும் மடங்களிலும் உட்பிரவேசித்து தேடுதல் நடத்தியதாக ஈராக் தெரிவித்துள்ளது.

இது ஒரு மோசமான ஆக்கிரமிப்பு நடவடிக்கை என அது குற்றஞ்சாட்டியுள்ளது.

இச்சம்பவங்கள் தொடர்பாக ஐ. நா. ஆயுத பரிசோதனைக் குழுவினர் சம்பந்தப்பட்டோரிடம் மன்னிப்புக் கோரியுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதாரிப் பயிலுநர்களுக்கு வேலை வாய்ப்பில் முதலிடம்

## பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கை

கொழும்பு, ஜூன், 23 பட்டதாரிப் பயிலுநர்கள் நிரந்தர வேலை வாய்ப்பைப் பெறும் போது அவர்களுக்கு பல நலன்களை அளிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானத்தின் படி அரசாங்கத் திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் உயர்தரங்களில் வெற்றிடங்களை நிரப்பும் போது பட்டதாரிப் பயிலுநர்கள் மாத்திரமே அவற்றுக்கு நியமிக்கப்படுவார்கள்.

இத்தகைய பயிலுநர்களுக்கு ஆகக் கூடிய வயதெல்லை இருக்க மாட்டாது நேர்முகப் பரீட்சையிலும் தேர்வுப் பரீட்சையிலும் வழங்கப்படும் புள்ளிகளில் இவர்களுக்கு 10 புள்ளிகள் கூடுதலாக அளிக்கப்படும்.

இரண்டு வருடங்களுக்கு மேல் பயிலுநர்களாக சேவையாற்றியவர்களுக்கு மட்டுமே அடுத்த 2 வருடங்களுக்கு இந்தச் சலுகைகள் வழங்கப்படும்.

இதற்கான சுற்றறிக்கை சம்பந்தப்பட்ட செயலாளர்களுக்கும் திணைக்களத்தின் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டிருப்பதாகப் பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-4)


திருநெல்வேலி

**கம்பன் சனசமூக நிலையத்தினால்**

**நடத்தப்பட்ட**

**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

| | | |
|---|---|---|
| 1 ஆம் பரிசு இல. | — | 437 |
| 2 ஆம் பரிசு இல. | — | 1725 |
| 3 ஆம் பரிசு இல. | — | 1516 |

ஆறுதல் பரிசு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 602 | 2. | 221 | 3. | 661 |
| 4. | 1820 | 5. | 879 | 6. | 1115 |

முக்கிய குறிப்பு;

★ மேலுள்ள பரிசில்களுக்குரியவர்கள் 29-06-97 அன்று பிற்பகல் 3-30 மணியளவில் திருநெல்வேலி கம்பன் சனசமூக நிலையத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

★ அன்று பரிசில்கள் பெறத் தவறின் பின்பு பரிசில்களைப் பெறமுடியாது.

(47953) - செயலாளர்





ஓம்

சாவகச்சேரி டச்சு வீதி,

அருள்மிகு

**ஸ்ரீ பழநி ஆண்டவர்**

ஆலயத்தின்

6 ஆவது ஸ்ரீ பழநிவேல் பவனியை

முன்னிட்டு

**சிறப்புப் போட்டிகள் - 1997**

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவு எல்லைக்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கான மேற்படி ஆலயத்தின் ஆதரவில்;

பேச்சுப் போட்டி
பண்ணிசைப் போட்டி
கட்டுரைப் போட்டி
சமய அறிவுப் போட்டி

(சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஆதரவுடன்)

★ விண்ணப்ப முடிவு திகதி 10 - 07 - 1997

★ போட்டிகள் பற்றிய விவரங்கள் தங்கள் பாடசாலை அதிபர்களிடமிருந்து அறிந்து கொள்ளவும்.

★ பெறுமதிமிக்க பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

★ விண்ணப்ப முகவரி: செயலாளர்,

ஸ்ரீபழநி ஆண்டவர் ஆலயம்
பரிபாலன சபை
டச்சு வீதி, சாவகச்சேரி.

ஆதரவிற்கு நன்றி!

- ஆலய பரிபாலன சபை

சாவகச்சேரி. (சி-988)



**யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி**

கரப்பந்தாட்ட அணியினை

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யாழ்ப்பாணம் கல்வி வலயம் ii இன் திணைக்களத்தால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்ட 19 வயது அணியினரையும், மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்ட 17 வயது அணியினரையும் பாராட்டுகின்றோம்.

கோட்ட மட்டத்தில் அதிக புள்ளிகளை பெற்று முதலாவதாக வந்த மெய்வல்லுநர் அணியினையும், மூன்றாவதாக வந்த வலைப் பந்தாட்ட அணியினையும் பாராட்டி மேலும் பல சாதனைகள் புரிய வேண்டும் எனவும் வாழ்த்துகின்றோம்.

- பழைய மாணவர் சங்கம்

ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி.
புத்தூர். (47946)


## கருத்தரங்கு

எதிர்வரும் ஒகஸ்ட்டில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தர தாவரவியல் மாணவர்களுக்கு தாவரவியல் புதிய பாடத் திட்டம் தொடர்பான கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ)

# உரும்பிராய், நவக்கிரி பகுதிகளில் கசிப்பு விற்பனை கண்டுபிடிப்பு

சுன்னாகம் மதுவரி நிலையத்தினர் தமது பிரிவில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி, விற்பனை ஆகியவற்றை ஒழிப்பதற்கு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். நிலைய பொறுப்பதிகாரி எஸ். சோதிநாதன் தலைமையில் சென்ற மதுவரி பரிசோதகர்கள் அண்மையில் நவக்கிரி உரும்பிராய் ஆகிய இடங்களில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர்களை கையும் மெய்யுமாக கண்டு பிடித்து அவர்கள் வசமிருந்த கசிப்பை கைப்பற்றினர். இவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

### தென்மராட்சியில்

# பனங் கள் பெருமளவில் வீண் விரயமாகின்றது

தென்மராட்சி பிரதேசத்தில் பனங் கள் சீசன் தொடங்கியுள்ளது. கள் உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும் அவற்றை விற்பனை செய்வதில் இப்பகுதியில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றன.

பல கள்ளுத் தவறணைகள் மூடப்பட்டுள்ளதால் அங்கத்தவர்கள் தற்போது இயங்குகின்ற தவறணைகளில் கள்ளினை வழங்குவதால் பெருமளவு கள் ஓரிடத்தில் தேங்குகிறது. இதனால் கள்ளினை கொள்வனவு செய்வதற்கு தவறணைகள் பின்னடிக்கின்றன.

இதனால் சீவல் தொழிலாளர்கள் காலையில் பெறும் கள்ளின் ஒரு குறிப்பிட்ட அளவினைத் தவிர மிகுதியினையும் மாலையில்பெறும் கள்ளினையும் வீடுகளில் வைத்திருந்து ஊற்றவேண்டியுள்ளதாகத் தெரிவித்தனர்.

தவறணைகள் மாலை6.00 மணியுடன் மூடப்படுவதால் தொழிலாளர்களால் மாலையில் கள் தவறணைக்கு வழங்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(117)

# நியமிக்கப்பட்ட புதிய டாக்டர்கள் அடுத்த மாதம் இங்கு வருவராம்

திருநெல்வேலி, ஜூன் 23 யாழ். மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலைகளுக்கும், யாழ். அரசினர் போதனா வைத்தியசாலைக்கும் சுகாதார அமைச்சினால் இம்மாதம் தொடக்கம் நியமனம் செய்யப்பட்டுள்ள 34 டாக்டர்கள் அடுத்த மாத முற்பகுதியில் இங்கு வந்து பணிகளைப் பொறுப்பேற்கவுள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ். திரும்பிய யாழ். சுகாதார சேவை பிரதிமாகாண பணிப்பாளர் டாக்டர் கே.ரி. சிவபாதம் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்தவாரம் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வாவை அமைச்சு அலுவலகத்தில் யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணபணிப்பாளரும், யாழ். அரசினர் போதனா வைத்தியசாலை பணிப்பாளரும் நேரில் சந்தித்து இங்குள்ள டாக்டர்கள் பற்றாக்குறை பற்றி கலந்துரையாடினர்.

தமது அமைச்சினால் நியமனம் செய்யப்பட்ட டாக்டர்கள்யாழ்.மாவட்டத்திற்கு ஜூலை மாத முற்பகுதியில் வந்து கடமையாற்றுவார்கள் என்றும், இவர்களுக்கு தங்குமிட வசதி உட்பட ஏனைய வசதிகளை ஒழுங்கு செய்த பின்பு இருவாரங்களுக்குள் தமக்கு அதுபற்றி அறிவிக்குமாறும் என்றும் பணிப்பாளர்களை அமைச்சர் கேட்டுள்ளார். (ஐ-135)

# பருத்தித்துறைப் பகுதியில் கோழித் திருட்டு அதிகரிப்பு

பருத்தித்துறைப் பகுதியில் கடந்த சில நாள்களாக கோழித்திருட்டுகள் அதிகரித்துள்ளன,

பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் ஒருவீட்டில் கடந்த வாரம் குஞ்சுகள் உட்பட 25 கோழிகள் ஒரே இரவில் திருடப்பட்டுள்ளன.

இதனால் கோழி வளர்ப்போர் இரவில் கோழிக் கூடுகளைக் காவல் காக்கவேண்டியிருப்பதாகத் தெரிவித்துள்ளனர். (ஐ-15)

### வன்னி சென்ற ஆசிரியர்கள் திரும்பி வரவில்லை

# தென்மராட்சியில் 3 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டன!

தென்மராட்சி, ஜூன் 23 வன்னிக்கு இடம் பெயர்ந்து சென்ற ஆசிரியர்கள் மீண்டும் திரும்பி வராததை அடுத்து தென்மராட்சி கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

சரசாலை அ. த. க. பாடசாலை, எழுதுமட்டுவாள் அ. த, க. பாடசாலை, கெருடாவில் சரஸ்வதி வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளுமே மூடப்பட்டுள்ளன.

ஒரு சில ஆசிரியர்களுடனும், குறைந்த எண்ணிக்கையான மாணவர்களுடனும் செயற்பட்டு வந்த இப்பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்கள் இடம்பெயர்ந்து வன்னிப்பகுதிக்குச் சென்றிருந்தனர். ஒரு வருடம் கழிந்த பின்னரும் இன்னமும் அவர்கள் திரும்பி வரவில்லை. இதனால் அங்கு கல்வி கற்ற மாணவர்கள் அயலில் உள்ள வேறு பாடசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இந்த மூன்று பாடசாலைகளும் தற்காலிகமாக மூடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

### தென்மராட்சிக் கோட்டத்தில்

# சில பாட சாலைகளை இணைக்க கல்வி அதிகாரிகள் யோசனை

தென்மராட்சி, ஜூன் 23 தென்மராட்சிப் பிரதேசத்தில் கல்விவளத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை அயலிலுள்ள பாடசாலைகளுடன் தற்காலிகமாக இணைத்து இயங்கச் செய்ய கோட்டக் கல்வி அதிகாரிகள் ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது.

இதன் பிரகாரம் கோட்டக் கல்வி அலுவலகத்தினர் அந்தந்தப் பாடசாலை மாணவர்களின் பெற்றோரிடம் நேரடியாக ஆலோசனைகளைப் பெற்று வருகின்றனர்.

முதற்கட்டமாக தற்போது 42 பிள்ளைகளுடன் இயங்கி வரும் கைதடி எருத்திடல் அ. த. க. பாடசாலையை கைதடி குருசாமி வித்தியாலயத்துடன் இணைத்து கல்வி வளத்தை அபிவிருத்தி செய்ய கோட்டக் கல்வி அலுவலகத்தினர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகிறது. (ஐ.117)


வெங்காயம், மரக்கறிவகைகள் பொதி செய்யக்கூடிய

**நெற் BAG**

தும்புத்தடி, பிரஸ் உற்பத்திக்கு தேவையான

**தடி**

மலிவான விலையில் பெற்றுக்கொள்ள!

**நியூ நாதன் ரேடர்ஸ்**

213, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(47750)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் ...

# அரசாங்க அறிவித்தல்
# வாக்காளர் இடாப்புக்கள் திருத்தம் - 1997

1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின்படி 1997 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் இடாப்புகளின் திருத்தம் ஆரம்பமாகிவிட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

(2) தற்சமயம் நடைமுறையிலிருக்கும் வாக்காளர் இடாப்புகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் கீழ்க்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

| இடாப்புகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள். | பார்வைக்கு வைக்கப்படும் இடாப்புகள் அல்லது அவற்றின் பாகங்கள் |
|---|---|
| 2. 1: மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம். | அரசாங்க அதிபர் அம் மாவட்டத்திற்குப் பதியும் அலுவலராயிருக்கும் அந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கு சம்பூர்ணமான வாக்காளர் இடாப்புப் பிரதி. |
| 2. 2: மாநகர சபையினதும் நகர சபையினதும் அலுவலகங்கள். | மாநகர சபைகள், நகரசபைகள் அடங்கிய பகுதியிலுள்ள வாக்காளர் பெயர்களடங்கிய இடாப்பின் பாகங்கள். |
| 2. 3: ஒவ்வொரு பிரதேச சபையினதும் அலுவலகம். | பிரதேச சபை பிரிவிற்குள்ளிருக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்களடங்கிய இடாப்பின் பாகங்கள், |

(3) ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு வாக்காளராயிருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்கிறதா என்று மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் உள்ள வாக்காளர் இடாப்பிலும் அல்லது பிரதேச சபை அலுவலகத்தில் அல்லது மாநகர சபை அல்லது நகர சபை அலுவலகத்தில் குறிப்பிட்ட பாகத்தைப் பரிசீலனை செய்வதன் மூலம் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

(4) வாக்காளர் இடாப்பை அல்லது அதன் பொருத்தமான பாகத்தைப் பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லை. எனக் காணும் ஒவ்வொருவரும், 1997 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01 ஆம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர் ஒவ்வொருவரும் அதில் தமது பெயரை கீழ்க்காணும் முறையில் இடுவித்துக்கொள்ளலாம்.

4. 1: இவ்வறிவித்தலோடு இணைக்கப்பட்டிருக்கும் இணைப்படிவத்தில் 1997 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பொருத்தமான தேர்தல் மாவட்டத்தின் பதியும் அலுவலருக்கு எழுத்து மூலம் ஒரு விண்ணப்பத்தினைச் செய்யலாம். இதற்கான விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

4. 2: பதியப்படுவதற்கான தகைமைபற்றி எல்லாத் தகவல்களையும் கிராம உத்தியோகத்தரினால் தமக்குக் கொடுக்கப்பட்ட விசேட பத்திரம் எதிலும் கொடுத்தும், கிராம உத்தியோகத்தரினால் கேட்கப்படும் ஏனைய விவரங்களைக் கொடுத்தும், இவ் விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் கையளிக்கவும்.

(5) உங்களினால் கையளிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை, உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தர், தனது சிபாரிசுடன் பதிவு அலுவலருக்கு அனுப்பி வைப்பார்.

பதிவு அலுவலர்,
தேர்தல் மாவட்ட இல. 10 - யாழ்ப்பாணம்.

தேர்தல் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1997 ஜூன் மாதம் 01 ஆம் திகதி.

## ஒரு வாக்காளராகப் பதியப்படுவதற்கான விண்ணப்பப் பத்திரம்-1997

.................................................................. பிரிவு கிராம உத்தியோகத்தர் ஊடாக பதியும் அலுவலர், தேர்தல் அலுவலகம், யாழ்ப்பாணம்.

.................................................................................................. ஆகிய நான் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஒரு வாக்காளராகப் பதிவு செய்து கொள்ள இத்தால் விண்ணப்பித்துக் கொள்கின்றேன்.

(2) எனது விண்ணப்பத்தின் சார்பாக கீழ்க்காணும் விவரங்கள் தரப்படுகின்றன.

2. 1: முழுப் பெயர்:

2. 2: முகவரி:

2. 3: பிறந்த திகதியும் வயதும்:

2. 4: 1997 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01 ஆம் திகதி மேற்படி முகவரியில் சாதாரண குடியிருப்பாளரா?

2. 5: பால்:

2. 6: இனம்:

2. 7: பதிவு மூலம் இலங்கைப் பிரஜையாயின் பிரஜாவுரிமைப்பத்திர இலக்கத்தினை குறிப்பிடுக:

2. 8: தேசிய அடையாள அட்டை அல்லது விசேட அடையாள அட்டை இலக்கம்:

2. 9: கிராம உத்தியோகத்தரின் பிரிவு:

திகதி: விண்ணப்பதாரியின் கையொப்பம்:

(சி-944)

# கொழும்பில் இருந்து மலத்தியோன் இங்கு எடுத்துவர ஏற்பாடு

திருநெல்வேலி, ஜூன் 23

கொழும்பிலுள்ள மலேரியா தடுப்பு இயக்க தலைமைப்பீடம் விரைவில் யாழ். சுகாதாரப் பிராந்தியத்திற்கு தேவையான மலத்தியோன் நுளம்பு கொல்லி மருந்தை அனுப்பி வைக்கவுள்ளது.

கடந்த சில மாத காலமாக மலத்தியோன் வெளிநாட்டிலிருந்து கொழும்புக்கு வந்து சேராமல் தடைப்பட்டிருந்ததாகவும், தற்போது அது அங்கு வந்து சேர்ந்துவிட்டதாகவும், இதனை அடுத்து யாழ். சுகாதார திணைக்களத்திற்கு மலத்தியோனை அனுப்பி வைக்க கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் டாக்டர் கே.ரி. சிவபாதம் தெரிவித்தார். (ஐ-135)

# பரிசளிப்பு விழா உரைகள் தமிழில் நிகழ்த்தப்பட வேண்டும்

வாசகர் திருமுகம்

கல்வித் திணைக்கள ஆய்வின்படி 1996 ஆம் ஆண்டில் வெளியான க. பொ. த. ப. சாதாரண தரப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் முப்பத்திஆறு வீதமான மாணவர்களே தமிழ் மொழியில் சித்தியடைந்துள்ளனர். தமிழ் மொழியறிவு மாணவர்களிடையே மிகவும் குறைந்துள்ளதையே இது காட்டுகிறது —

வட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டிதர் வகுப்பு தொடக்க நிகழ்வில் பேசிய தமிழறிஞர் க. சொக்கலிங்கம் (சொக்கன்) இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். அவர் கூறுவது போன்று ' இது மிகவும் கவலைக்குரிய நிலையே!'

''மதுரையில் பிறந்து சென்னையிலே கொல்லப்படும் தமிழ் மொழி தழைப்பது யாழ்ப்பாணத்திலே தான்'' என்று தமிழகத்து அறிஞர்களே வியந்து பாராட்டிய காலம் மாறி 'மிகவும் கவலைக்குரிய' இந்நிலை தோன்றக் காரணம் என்ன?

ஆங்கில மொழி போதனா மொழியாகக் கோலோச்சிய காலத்தில் தமிழ் மொழி தவிர்ந்த ஏனைய பாடங்கள் அனைத்தும் மாணவர்களுக்கு ஆங்கில மொழியிலேயே போதிக்கப்பட்டு வந்த நிலையிலும், தமிழ் மொழி கற்பிக்கப்படும் வகுப்புக்கு அப்பால் மாணவர்கள் தமிழில் உச்சரிக்கும் ஒவ்வொரு வார்த்தைக்கும் தண்டமாக ஐந்து சதம் அறவிடப்பட்டது.

இன்றோ அனைத்துப் பாடங்களும் தாய்மொழியில் கற்பிக்கப்படுகையில் பாடசாலைகளில் மாணவர்கள் தமிழ் மொழியில் போதிய தேர்ச்சி பெற்றாலன்றோ ஏனைய பாடங்களிலும் அவர்களால் சிறப்பாகத் தேர்ச்சி அடைய இயலும்?

பாடசாலைகளில் பயிற்றப்பட்ட தமிழாசிரியர்களுக்கு பற்றாக்குறை யிற்றுவிக்கும் ஆசிரியர்களுச்குப் பற்றாக்குறை நிலவுகிறது. அதனாலேயே மாணவர்கள் தமிழில் தேர்ச்சி அடையத் தவறுகிறார்கள் என்று காரணம் கூறப்படுகிறது.

மேலும் —

பெரும் பாடசாலைகள், தமது பொது விழாக்கள் வைபவங்களைக் குறிப்பாகப் பரிசளிப்பு விழாக்களை ஆங்கிலத்தில் நடத்துவதனை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

இத்தகைய ஒரு நிலைமை தொடரும் போது தமிழின்— போதனா மொழியின் — அந்தஸ்துக் குறித்து மாணவர் சமூகத்தில் தோற்றுவிக்கப்படும் தாழ்வு மனப்பான்மையை போக்குவது எங்ஙனம்?

குறிப்பிட்ட சில தனியார் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் இதில் ஒரு வில்லங்கமும் இருக்கத் தான் செய்கிறது. காரணம் அவற்றின் முகாமை ஒன்றில் தலைநகர் கொழும்பிலோ அன்றேல் வெளிநாட்டிலோ இருப்பதால் பரிசளிப்பு விழாக்களில் படிக்கப்படும் கல்லூரி அதிபர்களின் ஆண்டறிக்கைகள் ஆங்கிலத்தில் அனுப்பப்படவேண்டியதாகவுள்ளது. இதனைச் சுலபமாகவே நிவர்த்தி செய்யலாம். மேற்படி கல்லூரி அதிபரின் ஆண்டறிக்கையின் தமிழாக்கத்தை பரிசளிப்பு விழாக்களில் படிக்கலாம்; அல்லது தமிழ் மொழி பெயர்ப்பைத் தலைமைப் பீடத்திற்கு அனுப்பி வைக்கலாம்.

ஏனைய பாடசாலைகளில் பரிசளிப்பு உரைகள் தமிழில் நிகழ்த்தப்படுவது போல சம்பந்தப்பட்ட பாடசாலைகளிலும் அதை தமிழில் நிகழ்த்துவதே பொருத்தமானது.

அதை விடுத்துப் பரிசளிப்பு விழாக்களை வேற்றுமொழியில் நடத்துவதாயின் தமது தாய் மொழியின் அந்தஸ்தையிட்டு மாணவர் மனதில் அறிந்தோ அறியாமலோ ஏற்படுத்தப்பட்டு வரும் தாழ்வு மனப்பான்மை தொடரவே செய்யும்.

தமிழ் மொழியறிவு மாணவர்களிடம் மேம்பட சம்பந்தப்பட்ட சகலரும் ஒத்துழைத்தாலே பயன் பெருகும்.

யாழ்ப்பாணம். சா. ஆ. தருமரத்தினம்

# பருத்தித்துறை பஸ் சேவை

தற்போது தினமும் பிற்பகல் 3.00 மணிக்கே பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கடைசி பஸ் சேவை நடைபெற்று வருகிறது. இதற்குப் பின்னர் யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவை எதுவும் பருத்தித்துறையில் இருந்து இல்லை.

இதனால் யாழ். போதனா வைத்தியசாலை உள்ளிட்ட அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்களில் இரவுக்கடமைக்குச் செல்வோரும், வைத்தியா வசதிகள், விமான, கப்பல் பயணங்களுக்கும், ஏனைய அத்தியாவசிய தேவைகளுக்கும் அதிகாலையில் யாழ். நகரத்தில் சமுகமளிக்கவென செல்வோரும் கஷ்டப்பட வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு தினமும் பிற்பகல் 4.30 மணிக்கும், 5.00 மணிக்கும் பஸ் வண்டிகள் புறப்படுகின்றன. இது மிகப் பயன் உள்ளது; திருப்திகரமானது.

இதே போல் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான கடைசி நேரப் பஸ் சேவையாக 4.00 மணிக்கு அல்லது 4.30 மணிக்கு புறப்படும்படியாக ஆரம்பித்தால் பயணிகள் பெரிதும் நன்மையடைவார்கள்.

இது விடயத்தில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை கவனம் எடுக்க வேண்டும்.

பருத்தித்துறை, ஆடலரசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. கமலேஸ்வரி (குட்டி), 588/8, நாவலர் வீதி, (ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை), காலை 11-00, மணியில் இருந்து பார்வையிடலாம். [47938]

36 சிறி புதிய மொடல் உழவுயந்திரம் பெட்டியுடனும், சூரிய மின்கலமும் விற்பனைக்குண்டு. அப்பன் B - 233, கல்லூரி ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி. [47927]

EL 8921 கேம்பிறிட்ஜ் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய உரிமையாளரின் முகவரி: C.V. தங்கவடிவேலு, ஐயனார் வீதி, பருத்தித்துறை. [சி/989]

### ECONOMICS

A/L 99, 98, 97 ஆகிய வகுப்புகளுக்கு வீடுகளுக்கு வந்து Paper உட்பட யாழ் முன்னணி ஆசிரியரால் கற்பிக்கப்படும். L. சங்கர் ஆசிரியர், 501.A, மொகடீன் பள்ளி வீதி, வைத்தீஸ்வரா கல்லூரி அருகாமையில், யாழ்ப்பாணம். [47922]

### வீட்டுத் தளபாடங்கள்

தேவையான வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: 7/2இரத்தினம்ஒழுங்கை, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (47932)

### திருமணசேவை

எம் நிறுவனத்தில் சகல மதத்திலும், உத்தியோகத்திலும் மணமகன், மணமகள் உண்டு. ஜாதகம், புகைப்படத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும், தொடர்பு:- ''துர்க்கா'' திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [47906]

### தவறிவிட்டது

அரியதம்பி கிருஸ்ணதாஸ் என்பவருடைய இலக்கம் 740061445V தேசிய அடையாள அட்டை, இல. 94A/ SPI/ 188, யாழ். பல்கலைக் கழக அனுமதி அட்டை, வடமராட்சி பாஸ், விசேட அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். பல்கலைக் கழகத்தில் ஒப்படைக்கவும். [47945]

### மணமகன் தேவை

27 வயதுடைய மணப் பெண்ணுக்கு மணமகன் தேவை. உள்ளூர், வெளியூர் பரவாயில்லை கிரகபாவம் 81, தொடர்பு: ஸ்ரீ முருகன் சோதிட நிலையம். திருஞான சம்பந்த சர்மா, நல்லூர் வடக்கு வீதி, நல்லூர். செவ்வாய்க்கிழமைகளில் நிலையம் திறக்கப்படமாட்டா. [47941]

### கைமாறப்பட்டது

யாழ். சத்திரச் சந்தியருகே உள்ள பனம்பொருள் கடையில் A.55289 இலக்க லுமாலா சைக்கிள் தவறுதலாக மாறி எடுக்கப்பட்டுள்ளது. மற்றைய லுமாலா சைக்கிளை எடுத்துச் சென்றவர் கீழ்வரும் முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும். இல. 324, கஸ்தூரியார் வீதி, (உதயன் முன்பாக) யாழ்ப்பாணம். [47950]

### நாடகம் எழுதுவது எப்படி?

என்று விளக்கிக் கூறுகின்ற முதலாவது தமிழ் நூல், 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை எழுதிய ஒரு நாடகமும், 22 கட்டுரைகளும் எல்லோரும் வாசிக்கலாம். ரூபா 50. [47804]

---

## ஞானோதய அக்கடமி

கண்டி வீதி, சாவகச்சேரி.

மீண்டும் தென்மராட்சியில்!

திரு. லோகசிங்கம்

**A/L 97 பொருளியல்**

"புதிய மாதிரி வினா விடை வகுப்பு"

**ஆரம்பம்:- 25 - 06 - 97**

புதன்கிழமை பி. ப. 3 மணி,

- நிர்வாகி

(47929)

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சுண்டுக்குளியைச் சேர்ந்த

### அமரர் நாகமணி முத்துச்சாமி

(திருமேனி)

திதி: 23 -6-97

உதயம்: 10 - 10 - 1916

அஸ்தமனம்: 15 - 6 - 1995

அன்புள்ள கணவராகவும் பாசம் நிறைந்த அருமைத் தந்தையாகவும், பண்பும் பாசமும் நிறைந்த மாமனாராகவும், பொறுமையும் நேசமும் கொண்ட பேரனாராகவும், அயலவர்களுக்கு பரிவுகாட்டும் பண்பாளனாகவும் என்றும் எங்கள் உள்ளங்களில் நிறைந்து நின்ற எமது அன்புத்தெய்வமே என்றும் உமை மறவோம்!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீஞானவைரவர் அருள் வேண்டுகின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

''தாயகம்''
16/12, விதானையார் வீதி,
சுண்டுக்குளி
யாழ்ப்பாணம்.

(47947)

---

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 19 — 03 — 1973

உதிர்வு: 26 — 06 — 1994

### செல்வன் மகாலிங்கம் பூவேந்தன்

(பாபு)

**திதி 23 - 06 - 1997**

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய்த் திகழ்ந்தவனே!
ஆறாத் துயரில் எமை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட பாபுவே!
உமைப் பிரிந்து மூன்று ஆண்டுகள் மறைந்தாலும்
ஆறாதையா எம் துயரம்.

உமது பிரிவால் துயருறும்:

அன்பு அப்பா, அம்மா, மாமாமார், அத்தைமார்,
சித்தப்பாமார், சித்திமார், சகோதரர்கள்,
உறவினர், நண்பர்கள்.

கண்டுவில் வீதி,
சாவகச்சேரி.

(47939)

---



உ

அரியாலை - பிரப்பங்குளம்

## மகாமாரி அம்மன்

ஆலயம்

## சகஸ்ர (1009) சங்காபிஷேக மணவாளக்கோல திருவிழா

24-06-1997

சுவஸ்தி ஸ்ரீ நிகழும் ஈசுர வருஷம் ஆனித் திங்கள் 10 ஆம் நாள் (24 - 06 - 1997) செவ்வாய்க்கிழமை ஆனி திருவோண நட்சத்திரத்தில் நவோத்ர சகஸ்ர (1009) மகா சங்காபிஷேகமும், மணவாளக்கோல திருவிழாவும் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

காலை 8-00 மணிக்குக் கிரியைகள் ஆரம்பித்து பகல் 10-45 மணிக்குச் சங்காபிஷேகமும், பகல் 12-00 மணிக்கு பூசையும், தீபாராதனையும் இடம் பெறும்.

மாலை 4-00 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று, பூந்தண்டிகையில் அம்பாள் விசேட மேளவாத்தியத்துடன் வீதியுலா வருதலும் இடம் பெறும். அடியார்கள் அனைவரும் அம்பாளைத் தரிசித்து, இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

-- உபயகாரர்

(சி/985)

---

## பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்களுக்கான அறிவித்தல்

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்கள் அனைவரையும் தொழில் முகாமையாளர், 23 - 06 -97 தொடக்கம் 28 - 06 - 97 வரை முக்கிய விடயமாக 66, மணற்தரை ஒழுங்கை, திருநெல்வேலி எனும் முகவரியில் கட்டாயம் சந்திக்க விரும்புகின்றார்.

கா. சிவபாதசுந்தரம்
(தொழில் முகாமையாளர்)

(47954)

---

யா/ யாழ்ப்பாணம்

## இந்து மகளிர் கல்லூரி

லியோ கழகம்

இன்று (1997 - 06 - 23) நடைபெறவிருந்த எமது

**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு**

தவிர்க்க முடியாத காரணத்தால் 1997 - 09 - 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளதென்பதை அறியத் தருகின்றோம்.

லியோ கழகம்,
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

(47951)

---

## 49 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



விண்ணிலிருந்து நயினை மண்ணில்: 01 — 11 — 1967

பாரீசிலிருந்து பரந்த மண்ணில்: 06 — 05 — 1997

### அமரர் காராளபிள்ளை விநாயகசிவம்

(கண்ணன் - 5 ஆம் வட்டாரம், நயினாதீவு)

''நீ வளர்ந்து எமைக் காக்கும் நிழல் ஆவாய் என்றிருந்தோம்;
நீ மறைந்த நினைவொன்றே கனவாகி நிலைக்கிறது.''

அமரரின் அந்தியேட்டி 23 - 06 - 1997 திங்கட்கிழமை நயினாதீவுத் தீர்த்தக்கரையில் நடைபெறும்; அன்றைய தினம் எங்கள் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், சபிண்டீகரணத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கும்;

- குடும்பத்தினர்

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(47847)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தொண்டாவின் யோசனை

வடக்கு—கிழக்குப் பகுதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும்—

பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்றும்—

தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்திடம் கூட்டாக வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்று அமைச்சர் தொண்டமான் ஆலோசனை தெரிவித்திருக்கிறார்.

அந்த வேண்டுகோளுக்கு அரசாங்கம் செவிசாய்க்கவில்லையெனில், அவசர காலத்தை நீடிக்கும் வாக்கெடுப்பின்போது தமிழ்க் கட்சிகள் அரசுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும்—எனவும் அவர் யோசனை கூறியிருக்கிறார்.

அமைச்சர் தொண்டமானின் இந்தக் கருத்து ஒன்றும் புதியதல்ல போரினால் பாதிக்கப்படும் தமிழ் மக்களின் வாழ்க்கை அவலங்களைத் தெரிந்தவர்களும் உணர்ந்தவர்களும் தமிழ்க் கட்சிகள் இதனைச் செய்ய வேண்டும் என்றே எதிர்பார்க்கிறார்கள்; எதிர்பார்த்தார்கள்.

கடந்த மே மாதம் 13ஆம் திகதி அரச படைகள் ''ஜெயசிக்குறு'' நடவடிக்கையை ஆரம்பித்த பின்னர், போரை நிறுத்துமாறும், சமாதானப் போக்கைத் தொடருமாறும் தமிழ்க் கட்சிகள் அரசைக் கேட்டிருந்தன.

ஆனால் அரசு அதற்குச் செவிசாய்க்கவில்லை.

போரை நிறுத்துமாறு நாங்கள் கேட்டோம்; ஆனால் அரசு நிறுத்தவில்லை என்று சொல்லுமளவோடு தமிழ்க் கட்சிகள் நின்று கொண்டன.

அமைச்சர் தொண்டமான் தெரிவிக்கும் இரண்டாவது படிமுறைக்கு அவை நகரவில்லை. அதற்கான காரணங்கள் சம்பந்தப்பட்ட கட்சிகளுக்குத்தான் தெரியும். அக்கட்சிகள் தமது காரணங்களை உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கவில்லை. அதனால் தமிழ் மக்கள் குறிப்பிட்ட காரணங்கள் என்னவாக இருக்கும் என்று தாங்களே ஊகித்துத் தமக்குள் பலவாறாகப் பேசிக் கொண்டார்கள்.

எனவே—

இந்தக் கட்டத்திலாவது தமிழ்க் கட்சிகள் இரண்டாவது படிமுறையைப் பரீட்சித்துப் பார்க்கவேண்டும். அதற்கு இது நல்ல சந்தர்ப்பம், சிறிமானி கட்சிக்கும் அரசாங்கக் கட்சிக்கும் இடையில் மனக்கசப்பும் பிணக்கும் ஏற்பட்டுள்ளது. அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணைக்கு எதிராகத் தமிழ்க் கட்சிகள் வாக்களித்தால், ஜனநாயக முறையில், தமிழ் எம்.பிக்கள் போருக்கு எதிராகத் தெரிவிக்கும் ஓர் அடையாளமாகவேனும் அமையும் அல்லவா?

அமைச்சர் தொண்டமான் அரசில் அங்கம் வகிக்கிறார். அவ்வாறிருந்து மேற்படி ஆலோசனையை துணிச்சலோடு தெரிவிக்கிறார். அத்தகைய துணிவு ஏனைய தமிழ்த் தலைவர்களுக்கு ஏன் வரக்கூடாது? எட்டுக் கட்சிகள் சேர்ந்து ஓரணியில் இயங்க முடிவு செய்துள்ள இவ்வேளையில் தொண்டமானின் யோசனை பரீட்சித்துப் பார்க்கப்படும் என எதிர்பார்க்கலாமா?

# விபத்துக்குள்ளான புக்காரா பற்றிய அதி முக்கிய கோவைகள் எங்கே?

## பாதுகாப்பு வட்டாரங்கள் அதிர்ச்சி

கொழும்பு, ஜூன் 23

கடந்த மார்ச் மாதம் 16 ஆம் திகதி அநுராதபுரத்தில் விபத்துக்குள்ளான ''புக்காரா'' விமானம் தொடர்பாக விசாரணை நடத்திய பிரிட்டிஷ், பிரெஞ்சு நிபுணர் குழு சமர்ப்பித்த அறிக்கை பாதுகாப்பு வட்டாரங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது.

அந்த விமானம் தொடர்பான முக்கிய கோவையைக் காணவில்லை என அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதே இந்த அதிர்ச்சிக்கு காரணம் ஆகும்.

இந்த விமான விபத்துக் குறித்து பிரிட்டிஷ், பிரெஞ்சு நிபுணர் குழுக்கள் தனித்தனியாக விசாரணைகளை மேற்கொண்டன.

அவை விசாரணையை முடித்து இலங்கை அரசிடம் தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தன.

பல குறைபாடுகள் குறித்து அந்த அறிக்கைகளில் விவரிக்கப்பட்டிருந்தன.

அந்த அறிக்கைகளில் ஒன்றில், இந்த விமானக் கொள்வனவு தொடர்பான முக்கிய ஆவணங்கள் கொண்ட கோவையைக் காணவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த விடயம் விமானப்படை உயர் மட்டத்தை பெரிதும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

தற்சமயம் அந்தக்கோவையைத் தேடும் பணி நடைபெறுகிறது.

அந்தக் கோவை காணாமல் போனமைக்கு பொறுப்பானவர்கள் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் இராணுவ நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர் என்று விமானப்படை உயர்மட்டம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

)இ-3-150)

## புதிய கட்டடத் திறப்புவிழா

சாவகச்சேரி, ஜூன் 23

டச்சுவீதிஸ்ரீ பழனியாண்டவர் ஆலய பரிபாலனசபையினால் நடத்தப்படும் பூவேந்தன் பாலர் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

டென்மார்க்கில் விபத்தில் சிக்கி மரணமான மகாலிங்கம்—பூவேந்தன் என்பவரின் ஞாபகார்த்தமாகவே இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு—திறக்கப்படுகின்றது.

(ஐ-31)

## ஆஸி தூதர் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 23

இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுவர் டேவிட் ரிற்றிச்சி அடுத்த மாதம் 8 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்.

யாழ்ப்பாணத்தில் இரு தினங்கள் தங்கியிருக்கும் இவர் யாழ். செயலகத்தில் திணைக்கள தலைவர்களைச் சந்திப்பார்.

யாழ். மக்களின் தேவைகள், அவர்களின் தற்போதைய நிலை ஆகியன தொடர்பாக அவர் ஆராய்வார்.

யாழ். தொழில் நுட்பக் கல்லூரிக்கும் அவர் விஜயம் செய்வார். (இ-3)

# எம்.பிக்களை விலைக்கு வாங்கவா நோர்வேயின் ரூபா12 கோடி உதவி?

## கொழும்புப் பத்திரிகை கேள்வி

கொழும்பு, ஜூன் 23

அரசின் அதிகாரப் பரவலாக்கல் யோசனையை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற எம். பிக்களை விலைக்கு வாங்க நோர்வே அரசாங்கம் இலங்கை அரசுக்கு நிதி வழங்கியுள்ளதா?

கொழும்பில் இருந்து வெளிவரும் ''சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார இதழ் தனது ஆசிரியர் தலையங்கத்தில் இப்படிக் கேள்வி எழுப்பியுள்ளது.

அந்த வார இதழின் நேற்றைய பதிப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் முக்கிய அம்சம் வருமாறு:-

இலங்கையின் இன ஒற்றுமைக்கு செலவிடுமாறு நோர்வே அரசாங்கம் இலங்கை அரசுக்கு 12 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

1997 க்கும் 2001 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் அதிகாரப் பகிர்வு மூலம் இன ஒற்றுமையை ஏற்படுத்த இந்த உதவி வழங்கப்படுவதாக நோர்வே கூறியுள்ளது. ஆனால் அதற்கான திட்டங்கள் எதையும் கூறாமலேயே நிதியை நோர்வே வழங்கியுள்ளது.

ஆகவே தற்போது அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனையை நிறைவேற்றவே அந்த நிதி வழங்கப்படுவதாக கருதமுடிகிறது.

அப்படியாயின் இலங்கை அரசாங்கம் தனது அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற, எம். பிமார்களை விலைக்கு வாங்கவா இந்த நிதி வழங்கப்படுகிறது. என்ற கேள்வி எழுந்துள்ளது —

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ 3-150)

# காயமடைந்த பயிற்சி விமானி பலத்த பாதுகாப்புடன் சிகிச்சை

கொழும்பு, ஜூன் 23

கடந்த 14 ஆம் திகதி அநுராதபுரத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் விபத்துக்குள்ளான 'சியாமா செட்டி' விமானத்தில் இருந்து காயமடைந்த நிலையில் தப்பிய விமானப் பயிற்சியாளர் கொழும்பு ஆஸ்பத்திரியில் ஆயுதம் தாங்கிய படையினரின் பாதுகாப்புடன் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவருடன் எவரும் பேச அனுமதிக்கப்படவில்லை என்றும் —

விமானம் விபத்துக்குள்ளான விடயம் தொடர்பாக எவருடனும் பேச வேண்டாம் என்று அவருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

# இராணுவ சீருடையில் கொழும்பில் புலிகள்

## படை வட்டாரங்கள் தெரிவிப்பு

இராணுவத்தினரின் சீருடையில் விடுதலைப் புலிகள் கொழும்பில் நடமாடுவதாகப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தகவலையடுத்து எடுக்கப்படவேண்டிய மாற்றுவழி குறித்து இராணுவ உயர் வட்டாரங்கள் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிச்சைக்காரர்கள் போலவும், பிக்குமார் போலவும் வேடமணிந்து புலிகள் கொழும்பில் நடமாடுவதாக முன்னர் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

# சமாதான பேச்சு மூலம் விமோசனம் கிடைக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது

## சிவசிதம்பரம் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 23

''தமிழரின் கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஆயுதம் தாங்கவேண்டும் என்பது காலத்தின் தேவையாக இருந்திருக்கலாம். ஆனால் தற்போது பேச்சுவார்த்தை மூலம் விமோசனம் கிடைக்கும் என்ற சூழ்நிலை உருவாகிவிட்ட பின்னர் அதன் வழியில் ஆயுதம் தாங்கியவர்கள் திரும்புவது மேலானது. நமக்குத் தேவை சமாதானமே.''

திருச்செல்வம் பொதுப் பணி மன்றம் தந்தை செல்வா நூற்றாண்டு விழாவினைக் கொட்டாஞ்சேனை விவேகானந்தா மண்டபத்தில் நடத்தியபோது அங்கு உரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல்வாதிகளில் நேர்மை, நீதி, ஒழுக்கம் உள்ளவர்களைக் காண்பது அரிது. இத்தகைய நல்ல பண்புகளையும் ஒருங்கே கொண்ட இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவர் தந்தை செல்வா.

இந்த நூற்றாண்டில் நாம் பல அறிஞர்களையும், அரசியல் தலைவர்களையும், சட்ட மேதைகளையும் சந்தித்திருக்கின்றோம். ஆனால் மெழுகுவர்த்தியைப் போல தன்னையே அழித்துத் தமிழினம் வாழப் பாடுபட்ட தீந்தமிழ்த் தியாகி தந்தை செல்வா.

தந்தை செல்வாவுக்கும் நெல்சன் மண்டேலாவுக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. மண்டேலா 23 ஆண்டுகள் சிறையில் இருந்து போராடியவர். தந்தை செல்வா வாழ்நாள் முழுவதும் போராடியவர். நெருப்பை நெருப்பால்த்தான் அணைக்க முடியும் என்று கூறிவந்த நெல்சன் மண்டேலா இறுதியாக பேச்சுவார்த்தை மூலமே தீர்வு கண்டார். எமது இளைஞர்களும் தொடர்ந்து ஆயுதப்போராட்டத்தை மட்டுமே நம்பியிருக்காமல் நெல்சன் மண்டேலாவின் வழியைப்பின்பற்ற வேண்டும்.

பண்டா - செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டபோது அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்துடன் சேர்ந்து நானும் அதனை எதிர்த்தேன். இன்று அந்த ஒப்பந்தம் நிறைவேறியிருந்தால் எமக்கு இந்த அவலநிலை ஏற்பட்டிருக்க மாட்டாது என பலரும் சொல்கின்றனர். அந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப் படாததனால் உருவாகியுள்ள விளைவினை எண்ணிப்பார்த்து வெதும்புகின்றேன். அன்று இளமைத் துடிப்பால் அந்த ஒப்பந்தத்தை எதிர்த்தது மிகத் தவறானது என்று இன்று நான் வருந்துகின்றேன். இது சிறுபிள்ளைகளின் விளையாட்டல்ல. தமிழ் மக்களின் எதிர்காலத்துடன் — அவர்களது வாழ்வுடன் — சம்பந்தப்பட்டது.

1951 ஆம் ஆண்டிலேயே தமிழரசு மாநாட்டில் சுயநிர்ணய உரிமை முன்வைக்கப்பட்டது. திம்புவில் முன்வைக்கப்பட்ட 4 அம்சக் கோட்பாடுகளில் அதுவும் ஒன்றாகவுள்ளது. ஒரு சமஷ்டி ஆட்சி அமைப்பு முறையின் கீழ்தான் அதனை ஏற்படுத்த முடியும். அதை விடுத்து சுயநிர்ணய உரிமை என்று பேசிக்கொண்டிருந்தால் மட்டும் அது கிடைத்து விடப் போவதில்லை என்றார்.

(ஐ-5)

## சான்றிதழ்கள்

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்ட மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்பட்ட தையற் பயிற்சி வகுப்பின் இறுதிப் பரீட்சையில் அதி உயர் புள்ளிகள் பெற்ற எட்டு யுவதிகளுக்கு தையல் டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அண்மையில் மேற்படி மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம் பெற்ற வைபவத்தில் அதி உயர் புள்ளி பெற்ற யுவதிகளுக்கு டிப்ளோமா சான்றிதழ்களையும் ஏனைய மாணவிகளுக்கு பயிற்சி நெறிச் சான்றிதழ்களையும் தென்மராட்சிப் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் இ. பரராசசேகரம் வழங்கினார்.

(ஐ-117)

## நாளை

**ஆனி 10**

**செவ்வாய்க்கிழமை**

திதி: சதுர்த்தி

மாலை 5.50 வரை.

நட்சத்திரம்: திருவோணம்

முற்பகல் 11.32 வரை.

சுபநேரம்: 10.25-11.55

ராகுகாலம்: 2.55-4.25

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்)

வருகிறோம் — என்றார் அமைச்சர் அஷ்ரப்.

அதே சமயம் —

ஜனாதிபதிக்கும், அஷ்ரப்புக்குமிடையில் நடந்த பேச்சுக்களையடுத்து அஷ்ரப்பிடம் துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்களை வழங்க ஜனாதிபதி சம்மதித்துள்ளார் என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன:

கப்பல்துறை அமைச்சுடன் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்குக் கீழ் உள்ள வடக்கு மீள் குடியேற்றம், வடக்குக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்பும் பணிகளை மேற்கொள்ளும் அத்தியாவசிய சேவைகள் நாயகம் பிரிவு ஆகியவற்றையும் ஜனாதிபதி தனக்குக் கீழ் கொண்டு வந்துள்ளார்.

புதிய ஏற்பாடுகளின் படி அமைச்சர் அஷ்ரப் நாளை துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராகப்பதவி ஏற்கிறார்.

தபால், தொலைத்தொடர்பு, தொடர்புசாதனப் பிரதி அமைச்சராக எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாவும் நாளை பதவி ஏற்கிறார்.

ஏற்கனவே தபால், தொலைத்தொடர்பு, தொடர்புசாதன பிரதி அமைச்சராகப் பதவியேற்றுள்ள பிரியதர்சன யாப்பா, ஹிஸ்புல்லாவையும் பிரதி அமைச்சராக ஏற்று இருவருக்கும் கடமைகளைப் பிரித்து வழங்குமாறு தபால், தொலைத்தொடர்புகள், தொடர்பு சாதன அமைச்சர் மங்கள சமரவீராவை ஜனாதிபதி கேட்டுள்ளார்.

பெரும்பாலும் ஹிஸ்புல்லா கிழக்கு மாகாணத்துக்கான இந்த அமைச்சின் பணிகளை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படிக் கொழும்புப் பத்திரிகைகள் மேலும் தெரிவித்தது (இ-3-21-150)

# வவுனியாப் பகுதியில் மற்றொரு தாக்குதலை நிராகரிக்க முடியாது

## கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு, ஜூன் 23

''வவுனியாப்பகுதில் மற்றுமொரு பெரும் தாக்குதலை விடுதலைப்புலிகள் நடத்தலாம் என்பதை நிராகரிக்க முடியாது.''

இப்படி பாதுகாப்புவட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுததலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைப் படையினர் குழம்பிய நிலையில் உள்ளனர்.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் ''செய் அல்லது செத்து மடி'' என்று தாக்குதல் மூலம் உணர்த்தியுள்ளார். இன்னுமொருதாக்குதல் வவுனியாவில் இடம் பெறாது என்று சொல்ல முடியாது.

பிரபாகரன் ஆகக் கூடிய தமது திறனை எதிர்வரும் தாக்குதல்களில் வெளிக்காட்ட முனையலாம். எதிர்வரும் வாரங்களில் இதுதான் படையினருக்கு சவாலாக இருக்கப் போகிறது.

இப்படி அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

(இ-3-150)

## வெற்றி உறுதி...

(முதலாம் பக்கத் தொடர்)

துருப்புக்கள் தமது நிலைகளைப்பலப்படுத்தும் பணியை பூர்த்தி செய்துள்ளன. மே மாதம் 13 ஆம் ஆரம்பமன இந்த நடவடிக்கை நேற்று 40 நாளைப் பூர்த்தி செய்துள்ளது இதில் 12 நாள்களே நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ள நாள்கள் ஆகும்.

வவுனியாவில் இருந்து 14 கிலோ மீற்றர் முன்னேறிய 55 ஆவது படையணி தற்சமயம் புளியங்குளத்துக்கு அண்மையில் உள்ளது. பிரிகேடியர் சாந்த கொட்டகெதெனிய இந்த அணிக்கு தலைமை வகிக்கிறார்.

நெடுங்கேணி ஊடாக முன்னேறிய 53 ஆவது படையணி புளியங்குளத்தில் இருந்து 3 மைல் தூரத்தில் உள்ளது. பிரிகேடியர் வசந்த பெரேரா இந்த அணிக்கு தலைமை வகிக்கிறார்.

கடந்த 10 ஆம் திகதி தாண்டிக்குளம் பகுதி மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக சிதறிய படையணிகளை ஒன்று திரட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மீண்டும் இராணுவ நடவடிக்கை தொடரும்போது புலிகளின் தாக்குதல்கள் மிகப்பலமானதாகவே இருக்கும் என்பதை நிராகரிக்க முடியாது.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-150)

## தொப்பிக்கல...

(முதலாம் பக்கத் தொடர்)

என்றும் —

எல்லைக் கிராமங்களில் தாக்குதல் நடத்தவே புலிகள் இவ்வாறு ஊடுருவியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப் படுவதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் கிழக்கில் புலிகள் பெருந் தாக்குதல் ஒன்றை நடத்தலாம் என கிடைத்த தகவலையடுத்து படையினர் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று கொழும்பில் இருந்து வெளியாகும் ''சண்டே லீடர்'' பத்திரிகை நேற்று தலைப்புச்செய்தி வெளியிட்டுள்ளது.

''விடுதலைப் புலிகளின் ஆட்லறிகள் மட்டக்களப்பில் உள்ள முகாம்களை நோக்கி நிறுத்தப்பட்டுள்ளன.

''தூரவீச்சு ஆட்டிலறிகளும், ஸ்ரிங்கர்'' ரக ஏவுகணைகளும் இவ்வாறு புலிகளால் நிறுத்தப்பட்டுள்ளன.

''இவ்வாறு கனரக ஆயுதங்கள் நிறுத்தப்பட்டுள்ளதைக் கண்டதாக மக்கள் தெரிவித்தனர்.''

இப்படி அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

(இ-3-150)

# வடக்கு - கிழக்கு பாடசாலைகளில் சிற்றூழியர்கள் நியமிக்கப்படுவர்

வடக்கு — கிழக்கு பாடசாலைகளுக்கான சிற்றூழியர் நியமனங்களை மீண்டும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொளுமாறு ஜனாதிபதி வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் பி. டி. சிறிகுணபால மேற்கண்ட தகவலை மட்டக்களப்பு நாடாளுமன்ற உப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்துக்கு அறிவித்துள்ளார்.

பாடசாலைகளில் நிலவும் சிற்றூழியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் கேட்டிருந்தார். (இ-3-150)

# மெய்வன்மைப் போட்டி திருகோணமலையில்

கொழும்பு, ஜூன் 23

வடக்கு—கிழக்கு பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகளை திருகோணமலையில் நடத்துவது என்று மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டமைச்சு முடிவு செய்துள்ளது.

இப்போட்டிகளை அம்பாறையில் நடத்த ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம், வவுனியா மாவட்ட மாணவர்களும் இப்போட்டிகளில் பங்குபற்ற முடிவு செய்துள்ளதால், அம்பாறையில் நடத்துவது பாதுகாப்புக்கு உகந்ததாக இருக்காது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து திருமலையில் அடுத்தமாதப் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

(இ-3)

## குர்டிஷ் போராளி...

(முதலாம் பக்கத் தொடர்)

கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன:

ஆப்கானிஸ்தானில் கொள்வனவு செய்யப்பட்ட ஏவுகணைகளே தற்பொழுது புலிகளிடம் உள்ளன.

இலங்கை அரசின் ''கிபிர்'' ரக விமானங்களையும், எம். ஐ. 24 ரக ஹெலிகளையும் வீழ்த்தக் கூடிய சக்தி இந்த ஏவுகணைகளுக்கு இல்லை.

இதனாலேயே நவீன ஏவுகணைகளை குர்டிஷ் போராளிகளிடம் இருந்து புலிகள் வாங்க முயற்சி எடுத்துள்ளனர்:

இந்த ஏவுகணைகளை புலிகள் எடுத்து வருவதைத் தடுக்க இலங்கையின் பாதுகாப்பு வலயப் பகுதியில் விமானப்படை, கடற்படை ஆகியவற்றை உஷார் நிலையில் இருக்குமாறு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3-150)


உ

ஓம் சரவணபவ

யா/ ஏழாலை

அத்தியடி முருகமூர்த்தி ஆலய

கும்பாபிஷேக நாள்

மணவாளக்கோல விழா விஞ்ஞாபனம்

நாளை (24-06-97) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று, முருகப்பெருமான் தேவசேனா வள்ளி சமேதராக வீதியுலா வருதல் இடம்பெறும். அடியார்கள் அனைவரும் வருகைதந்து முருகப்பெருமான் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

பிரதம குரு: சிவாகம வித்பத்ஜோதி
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்
(புன்னாலைக்கட்டுவன்)

ஆலய குரு: பிரம்மஸ்ரீ தி. சோமநாதசர்மா
(ஊரெழு)

உபயம்:
ஷை ஆலய அடியார்கள்,
ஆலய அறங்காவலர்.

(47903)


## யுத்தத்தை நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்)

வடக்கு — கிழக்கின் தற்போதைய நிலை குறித்து ஆராய்ந்து கவலை தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்றக்குழுத் தலைவரும், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜ சிங்கம் கூட்டணியின் முடிவு குறித்து மட்டக்களப்பு உதயன் செய்தியாளரிடம் நேற்றுத் தெரிவித்ததாவது:-

இன்றைய யுத்தம் காரணமாக தமிழ் மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் ஏராளம். அரசியல் தீர்வு விடயத்தை விட்டு யுத்தத்திலேயே ஆர்வம் காட்டுவதாகவே அரசின் தற்போதைய செயற்பாடுகள் அமைகின்றன.

யுத்த நிறுத்தம் உடன் கொண்டுவரப்படவேண்டும்; 3 ஆம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்; பேச்சு மூலம் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகள் இல்லாத எந்த ஒரு தீர்வும் நடைமுறைக்குச் சாத்தியமற்றது. விடுதலைப் புலிகளை உள்ளடக்கியதாகவே அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

எமது கூட்டணி எடுத்துள்ள 3 கோரிக்கைகளையும் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி வலியுறுத்துவோம். அதன் பின் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறிவிடுவோம்.

அவசர கால நீடிப்புப் பிரேரணை விவாதம் முடிந்ததும் நாடாளுமன்றத்துக்குச் சென்று அதற்கு எதிராக வாக்களிப்போம்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3-21)

# நலநோன்பு நிலையத்தில் மோசமான வாழ்க்கை நிலை

## கொட்டில் திருத்தப் பணம் இல்லை

வலிகாமம் தெற்கு, ஜூன் 23

உடுவில், ஆலடியில் உள்ள இலந்தையடி நலநோன்பு நிலையத்தில் தங்கி உள்ள குடும்பங்களினது கொட்டில்கள் மிகவும் மோசமான நிலையில் இருந்து வருகின்றன.

தமது கொட்டில்களை வேய அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியை பெறுவதற்காக இவர்கள் இப்பகுதி கிராமசேவையாளரை அணுகி உள்ளனர்.

உடுவிலில் உள்ள மற்றொரு நலநோன்பு நிலையத்தில் ஒரு சிறிய வீட்டில் 19 குடும்பங்கள் தங்கி வாழுகின்றன.

இடநெருக்கடி காரணமாக சுத்தம் சுகாதாரம் பாதிக்கப்படுவதால் அடிக்கடி காய்ச்சல், வாந்திபேதி, கண் நோய் போன்ற தொற்று வியாதிகள் பரவி வருகின்றன என்று கூறப்படுகிறது.

(இ-152)

## துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்)

சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த கந்தையா நாகராசா (வயது 48) என்பவரே உயிரிழந்தவராவார்.

வயிற்றில் விழுந்த சூட்டினால் குடல் வெளியேறிய நிலையில் காணப்படும் இவரது உடலின் ஏனைய பல உறுப்புக்களிலும் (காலில் இருந்து கழுத்து வரை) துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

அதிகாலை வேளை தோட்டத்துக்குத் தண்ணீர் இறைப்பதற்காகச் சென்ற வேளையே, அப்பகுதியில் பதுங்கியிருந்த படையினர் அவரை நோக்கிச் சுட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சடலம் மரணவிசாரணையின் பொருட்டும், பிரேத பரிசோதனையின் நிமித்தமும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது.

(இ-15)

## நீர்வேலி சம்பவம் குறித்து அறிவிப்பு

நீர்வேலியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற சம்பவத்தில் நான்கு படையினர் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்றுத் தெரிவித்தது.

படையினர் சென்ற வாகனம் ஒன்றின் மீது இரு கிரனேட்டுக்கள் வீசப்பட்டு, துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டதாகவும் —

காயமடைந்த படையினர் பலாலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## 4 பொலீஸார் காயம்

மட்டக்களப்பு நகரில் சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் குண்டு ஒன்று வெடித்ததில் 4 பொலீஸாரும் சிவில் தொண்டர் படையினர் ஒருவரும் காயமடைந்தனர்.

போக்குவரத்து சபைக்கு அருகில் உள்ள பொலீஸ் காவலரண் பகுதியிலேயே இக்குண்டு வெடித்தது.

(இ-3-21)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23-06-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org